DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.12/2023

Prosecution side witness for P.W.15

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.முத்துக்குமார் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.06.2026.**

A1 absent Petition u/s.355 of BNSS filed and allowed. A2 produced on PT warrant. Accused counsel Present.

<u>முதல்விசாரணை:-</u>

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம்தாலுக்கா அன்னப்பாறை கீழத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் சொந்தமாக வேன் வைத்து டிரைவராக வாடகைக்கு ஓட்டி வருகிறேன். எனக்கு சொந்தமான TN 87 B 8842 என்ற ஹீரோ ஹோண்டா பைக்கை 2022ம் வருடம் உடன்குடியில் உள்ள அம்பாள் பைனான்ஸ் மூலம் வாங்கி இருந்தேன். அந்த வண்டி எனக்கு முன்பு வாங்கியிருந்த பழைய உரிமையாளர் பெயரில் தான்இருந்து வந்தது. தற்போது அந்த உரிமையாளர் பெயர் நியாபகம் இல்லை. அந்த வண்டியை 14.04.2022 ந் தேதி வண்டியை உடன்குடி ஈபி ஆபிஸ் அருகில் உள்ள தோட்டத்திற்கு முன்பு விட்டுவிட்டு ஆடு மாடு தண்ணீர் ஊற்றுவதற்காக உள்ளே சென்று விட்டேன். பிறகு வெளியில் வந்து பார்க்கும் போது நான் நிறுத்தியிருந்த மேற்படி வண்டியை காணவில்லை. அக்கம் பக்கம் ே்தடி பார்த்தும் வண்டியை கண்டுபிடிக்க முடியவில்லை. பின்பு 10.05.2022 ந் தேதி குலசேசகரபட்டினம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அதற்கு எனக்கு ரசீது கொடுத்தார்கள். அதன் பின்பு சாத்தான்குளம் காவல்

நிலையத்திலிருந்து போன் செய்தார்கள். அந்த வண்டியை தாவீது, டேனிசெல்வம் என்பவர்கள் திருடி சென்று விட்டதாகவும் அதை கண்டுபிடித்து வைத்திருப்பதாகவும சொன்னார்கள். நான் ஏற்கனவே குலசேகரபட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாக சொன்னேன். அந்த வண்டியை நம்பர் பிளேட் எல்லாம் மாற்றிவிட்டு கண்டம் பண்ணி வைத்திருந்தார்கள். அந்த வண்டியை வைத்து மேற்படி இரண்டுபேரும் சேர்ந்து கண்ணன் என்பவரை எறித்து கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டேன். நான் குலசேகரபட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான மனு ரசீது நகல் நீதிமன்றத்தில் காட்டப்படுவது அது **அ.சா.ஆ** 8 ஆகும். நான் குலசேகரபட்டினம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான மனு சான்றிட்ட நகல் நீதிமன்றத்தில் காட்டப்படுவது அது **அ.சா.ஆ** 9 ஆகும். வாகன கிரைய ஒப்பந்த பத்திரம் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ 10,** வாகன பதிவு சான்றிதழ் நகல் அ.சா.ஆ **11 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ஒரு வாகனத்தை வாங்கியவுடன் பெயர் மாற்றம் செய்யவேண்டும என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் பெயர் மாற்றம் செய்யாததற்கு காரணம் என்ன என்றால் வண்டி வாங்கி சில நாள் தான் ஆனது. அந்த வண்டியில் அசல் ஆர்.சி புக்கை வாங்கினேனா இல்லை அந்த புக் பைன்னாசில் இருந்தது.நான் வண்டி காணாமல் போனது சம்மந்தமாக கொடுத்த புகார் மனுவிற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு வழங்கி சிஎஸ்ஆர் அசலை போலீசார் பெற்று கொண்டார்கள் என்றால் சரிதான். எனது வண்டியை திருடியது யார் என்றும் அதை வைத்து என்ன எனன் செய்தார் என்றும் போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். நான் அந்த வண்டியை திரும்ப பெறுவதற்கு முயற்சி செய்தேனா என்றால் முயற்றி செய்தேன். வண்டியை திருப்பி தந்து விட்டார்களா என்றால் இல்லை. நான் வண்டியின் உரிமையாளர் என்பதால் தான் அந்த வண்டியை என்னிடம்

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கில் ஏதுவாக பொய்யாக உருவாக்கப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல. அ.சா.ஆ 8 முதல் அ.சா.ஆ 11 முதலான ஆவணங்கள் வழக்கிற்கு ஏற்றவாறு பொய்யாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.